மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM ජෙසියම්

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 02 | குரல்: 138 | வள்ளுவர் ஆண்டு 2054 | சனிக்கிழமை 20.01.2024 | பக்கங்கள் 13

தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியமும் மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமானால் சிவஞானம் சிறீதரன் அவர்களை ஆதரித்து வாக்களிக்க வேண்டியது வாக்களிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் தார்மீக உரிமையாகும்.

தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து தவிர்க்கப்பட வேண்டியவர் தெற்கத்தைய சிங்கள தேசிய அரசியலை முன்னெடுக்கும் சுமந்திரன் அவர்களைத் தான். போர்க்குற்ற விசாரணையில் தமிழீழ விடு தலைப் புலிகளையும் விசாரணை செய்ய வேண்டும் என சர்வதேச அரங்கில் குரல் எழுப்பியதையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்ததையும் நாம் இன்றும் மறந்துவிடவில்லை என்று தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

# தமிழ் இனத்தின் கோடரிக் காம்பு சுமந்திரனை தமிழர் அரசியலை விட்டு விலக்குவோம்!




## தமிழ் தேசியப் பண்பாட்டுப் பேரவை
National Forum of Tamil Culture
දෙමළ ජාතික සංස්කෘතික සංසදය

## தமிழரசின் தலைமைக்கான தேர்தலைக் குழப்பச் சதி?



பக்கம்–11

தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தல் நெருங்கிவரும் நிலையில், தேர்தலைக் குழப்பச் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா?

எனச் சந்தேகம் ஏற்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்தலுக் கான வேட்பாளர்களில் ஒருவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான யோகேஸ்வரன்.

## சிங்கள வேதாளம் மீண்டும் 13 ஐ உபதேசிக்கிறது!



பக்கம்–07




பக்கம்–04

## இந்தியவாழ் இலங்கை அகதிகளுக்கு உலக அங்கீகாரமிக்க கடவுச்சீட்டு!

# சுவாரஸ்யமடையும் தேர்தல் களம்! சுமந்திரன் ஆதரவாளர்களின் முடிவில் திடீர் மாற்றம்!



தமிழ்த்தேசியத்தில் உறுதிக்கொண்ட தலைவர் ஒருவரை நியமிப்பதில் சுமந்திரன் ஆதரவாளர்களின் முடிவில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை பிரதேசத்தில் இருக்கக்கூடிய இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளை தலைவர் தவராசா சர்ஜீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்தேசியத்தின் பால் உள்ள பற்றுறுதியை கொண்டு செயற்படும் ஒருவரை நியமிப்பதில் உறுப்பினர்கள் தீவிரமாக உள்ளனர்.
அந்த வகையில், வாக்கெடுப்பிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை பொறுத்தமட்டில் தமிழ்தேசியத்தின்பால் உள்ள பற்றுறுதியை கொண்டு செயற்படும் சிறீதரன் அவர்களையே தெரிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

கட்சி மீதான பல திட்டங்களை மையப்படுத்தியே தற்போது வாக்குகளை வழங்க தீர்மானித்துள்ளதுடன், சிறீதரன் அவர்களே சிறந்தவர் எனவும் உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர். அதிபர் சட்டத்தரணியாக சட்டத்துறையில் சிறந்து விளங்குபவர் சுமந்திரன்.
ஆனால் தற்போது அவர் தலைமை பதவிக்கு வருகின்றார் என்ற போது பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. சர்வதேச சார்ந்த விடயங்களில் சுமந்திரன் அவர்கள் பல விடயங்களை கையாண்டு வந்துள்ளதுடன், அவருக்கு கட்சியில் உள்ள முக்கிய பதவிகளை வழங்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இரத்து!

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழு கூட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது. இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுக்குழு கூட்டம் நாளை திருகோணமலையில் நடைபெறும். காலை 10 மணிக்கு பொதுக்குழு உறுப்பினர்கள் கூடி, புதிய தலைவரை தெரிவு செய்வார்கள். இதற்கு முன்னதாக, இன்று மாலை கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது.
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய மத்திய குழுவின் கடைசிக் கூட்டம் இது. எனினும், கட்சியின் பதில் பொதுச் செயலாளரிடமிருந்து, மத்திய குழுக்கூட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் அறிவிக்கப் பட்டுள்ளது. பதில் பொதுச்செயலாளர் பா.சத்தியலிங்கம் நோய்வாய்ப்பட்டுள்ள நிலையில், அவரல் மத்தியகுழு கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாததால், கூட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது.
அனைத்து மத்திய குழு உறுப்பினர்க ளுக்கும் இது அறிவிக்கப்பட்டுள்ளது.
திட்டமிட்டபடி 21ஆம் திகதி பொதுக் குழு கூடி, தலைவர் தெரிவு நடைபெறும் என்பது உறுதியாகியுள் எது. இதற்காக 5 அல்லது 8 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும். அவர்கள் முன்னிலையில் தலைவர் தெரிவு நடைபெறும்.

## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைகு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :
No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339




# முல்லைத்தீவில் இந்திய மீனவரின் உடலம் கரை ஒதுங்கியுள்ளது!






முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடற்கரை பகுதியில் அடையாளம் தெரியாத மீனவர் ஒருவரின் உடலம் நேற்று 19-01-24 கரையோதுங்கியுள்ளது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் உள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதி கடற்கரையிலேயே இந்த உடலம் கரை ஒதுங்கி உள்ளது

குறித்த உடல் தெப்பம் ஒன்றில் மிதந்து வந்த நிலையில் கரை ஒதுங்கி இருக்கின்றது

இதில் உள்ள கான்களில் இந்தியாவின் தெலுங்கு மொழிகள் எழுதப்பட்ட அடையாளங்கள் காணப்படு கின்றன

குறித்த உடலம் கரையொதுங்கியுள்ளமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது

பொலிசார் உடலத்தினை மீட்பதற்காக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்து நீதிபதியை அழைத்துச் சென்று உடலத்தை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் கள்

குறித்த உடலமானது இராணுவத்தினரின் முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் ஊடகங்கள் வீடியோ பதிவு செய்ய இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்

# செங்கடல் விவகாரம் இந்தியாவுக்கு பெரும் ஆபத்து!

செங்கடல் விவகாரம் காரணமாக இந்தியாவுக்கு பெரும் ஆபத்து நிலவுவதாக கனடாவில் இருக்கும் அரசியல் ஆய்வாளர் நேரு குணரட்னம் தெரிவித் துள்ளார்.

பாகிஸ்தான் பொருளாதாரத்தில் மிக மோசமாக பின்தங்கியுள்ள நிலையில் இந்தியா தற்போது பாகிஸ்தானை எதிரியாக பார்க்காத நிலையில் சீனாவினை முதன்மை எதிரியாக கருதுகின்றது.

**இந்தியாவிற்கு பெரும் ஆபத்து**

இவ்வாறான பின்னணியில் ஈரான், பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றம் காரணமாக செங்கடல் வழியாக மசகு எண்ணெய் பெறுவதில் இந்தியா விற்கு பெரும் ஆபத்து நிலவும் எனவும் குறிப்பிட் டுள்ளார்.

ஈரான், பாகிஸ்தான் பதற்றம் காரணமாக எண்ணெய் விலையில் மாற்றம் ஏற்படுவதினை இந்தியா ஒருபோதும் விரும்பாது என்றும் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பான பல விரிவான தகவல்களுடன் வருகிறது ஊடறுப்பு நிகழ்ச்சி,



தேசியம் www.thesiyamnews.com THESIYAM

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!

+94 77 149 9094

# இந்தியவாழ் இலங்கை அகதிகளுக்கு உலக அங்கீகாரமிக்க கடவுச்சீட்டு!




சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்து அகதிவாழ்க்கை வாழ்ந்துவரும் இலங்கை வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அகதிகளுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின்கீழ் சர்வதேச கடவுச்சீட்டு நேற்று (19) சென்னையில் வழங்கி வைக்கப்பட்டது என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பல்வேறு காலகட்டங்களில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண யுத்த சூழ்நிலைகளின்போது இந்திய மண்ணை நம்பி தஞ்சம் புகுந்த வடக்கு கிழக்கை சேர்ந்த கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இந்தியாவின் பல்வேறு முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இலங்கைக்குத் திரும்புவதாயினும் வெளிச்செல்லும் பாஸ்கள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலையினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டுசென்ற போது, அவரது வழிகாட்டுதலின்கீழ், இந்தியவாழ் இலங்கை அகதிகளுக்கு உடன் அமலுக்கு வரும்வகையில் இலங்கை அரசின் வரலாற்றில் முதல்தடவையாக சர்வதேச அங்கிகாரமிக்க கடவுச்சீட்டுகள் இன்று வழங்கி வைக்கப்பட்டன என கௌரவ ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

உலகில் வேறெங்கிலும் இதற்குமுன்னர் இலங்கை அரசால் இவ்வாறானதொரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதுடன், சர்வதேச அங்கிகாரம்பெற்ற இலங்கைக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதனூடாக உலகின் எப்பகுதிக்கும் செல்லும் தகுதியை இந்தியவாழ் இலங்கை அகதிகள் இன்றுமுதல் பெற்றுக்கொள்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கடவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஈடிணையற்ற தமது ஒத்துழைப்புகளை வழங்கிய ஜனாதிபதி செயலக அதிகாரிகள், பிரதம மந்திரி செயலக அதிகாரிகள், வெளியுறவுத்துறைச் செயலக அதிகாரிகள், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுக செனவிரட்ன, சென்னைக்கான இலங்கை உதவி உயர்ஸ்தானிகர் வெங்கடேஸ்வரன் ஆகியோருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதுடன், மேலும் இக்கோரிக்கையை நிறைவேற்ற பல வருடகாலமாக அவ்வப்போதைய அரசாங்கத்திடம் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை சாத்தியப்படாதிருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடன் இவ்வகதிகளுக்கு அங்கிகாரம் கிடைத்திருப்பதானது சுமார் ஒரு இலட்சம் அகதிகளுக்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய வரப்பிரசாதமாகும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

40 வருடங்களாக தாய் நாட்டை விட்டு வெளியேறியவர்களுக்கு அடைக்கலம் வழங்க உதவிய இந்திய அரசுக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், மேலும், தமிழகத்திலுள்ள அனைத்து நலன்புரித் திட்டங்களுக்குள் உள்வாங்கி அகதிமுகாம் என்ற சொல்லை மாற்றி மறுவாழ்வு நிலையம் என உருவாக்கிய தமிழக முதல்வருக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தானுக்கும் இவ்விடத்தில் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றோம்.

மேலும் இந்திய அகதி முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குமாறு இரண்டுமுறை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பஜக தமிழகத் தலைவர் அண்ணாமலையிடம் கோரிக்கை முன்வைத்ததைத் தொடர்ந்து, இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரால் அவ்விடயம் தொடர்பான வேலைத் திட்டங்களுக்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் கௌரவ ஆளுநர் செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.






# அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் இன்று கலாசூரி சிவகுருநாதன் நூல் வெளியீடு!

**அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.**

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” வெளியீட்டு விழா இன்று 20.01. 2024 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெற வுள்ளது.

கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் (Tamil Senior Citizen Hall>11 Bromby Street> Isaacs ACT 2607) சட்டத்தரணி,இலக்கிய ஆர்வலர், எழுத்தாளருமான திரு. க. திருவருள் வள்ளல் தலைமையில் நடை பெறவுள்ளது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறை யிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்.


தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய, கலாசூரி இ.சிவகுருநா தன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே.

சிறப்பு அதிதியாக இலங்கை அரசின் உயர் ஸ்தா னிகர் திருமதி. சித்ராங்கனி வாகிஷ்வரா அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார். அதன்பின் திரு. நிமலன் கார்த்திகேயன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனை பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார். தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி சிறப்புரையை எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திரு. சுந்தரதாஸ் ஆற்றுவார்.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வி யல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” எனும் நூலின் தொகுப்பாசிரியர் திரு.ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கு வார்.இதன் பின் இந்த நிகழ்வுகளை ஒழுங்க மைத்து, தொகுத்து வழங்கும் சின்னத்துரை மயூ ரன் அவர்களின் நன்றியுரையுடன் இறுதியாக விழா நிறைவு பெறும்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன்




அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” எனும் நூல் வெளியாகி உள்ளது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக (08/08/2003) “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” எனும் நூலை ‘ஐங்கரன் விக்கி னேஸ்வரா’ தொகுத்துள்ளார்.

மூன்று பாகங்களாக வெளிவரும்
“இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” நூலில் தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்த கலாசூரி சிவகுருநாதன் ஆற்றிய பெருங்கடமையை ஊடக, இலக்கிய அறிஞர்களின் திறனாய்வு கட்டுரைகள் அலங்கரிக்கின்றன.

இந்நூலின் முதல் அங்கம்
‘ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குக் களம் தந்த தினகரன் சிவகுருநாதன்’ எனும் பகுதி அவரைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகளும், திறனாய்வு ஆக்கங்களை பல ஊடக ஆளுமையாளர்கள் எழுதியுள்ளனர்.

இரண்டாம் அங்கம் “பத்திரிகை ஆசிரியர்களுள் - மக்கள் திலகம்” எனும் பகுதியாக அவரைப் பற்றிய அரசியல் வல்லுநர்களின்
அஞ்சலிகளும், ஆராதனைகளும் இடம் பெற்றுள் ளது. இந்நூலில் “பூமாலைக்கு ஏன் பாமாலை” எனும் மூன்றாம் பகுதியில் கவிதைகளில் தெரிந்த சிவகுரு நாதன் சிந்தனைகளை பல கவிஞர்கள் வடித்துள் ளனர். தினகரனில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் கலாசூரி சிவகுருநாதன் பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் முன்னின்றதற்கு சாட்சியமாக இக்கவிதைகள் உள்ளன.

# அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் கலாசூரி சிவகுருநாதன் நூல் வெளியீடு

## இலங்கை இதழியலில் சிவகுருநாதன்

**இடம்: கன்பரா தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபம்**

**சனிக்கிழமை | 20-01-2024 | மாலை 4:30 மணி**

**தலைமை:**
திரு. க. திருவருள் வள்ளல்
(சட்டத்தரணி, இலக்கிய ஆர்வலர்)

**நூல் அறிமுகவுரை:**
லெ. முருகபூபதி
(மூத்த தமிழ் எழுத்தாளர்)


**சிறப்பு அதிதி:**
திருமதி. சித்ராங்கனி வாகிஷ்வரா
(இலங்கை அரச உயர் ஸ்தானிகர்)

**இ. சிவகுருநாதன் ஊடகபணி சிறப்புரை:**
திரு. நிமலன் கார்த்திகேயன் MBA
(இலக்கிய ஆர்வலர்)

**தினகரனில் சிவகுருநாதன் சிறப்புரை:**
திரு. சுந்தரதாஸ்
(எழுத்தாளர், இலக்கிய ஆர்வலர்)

**நூல் ஏற்புரை:**
திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா
(நூலின் தொகுப்பாசிரியர்)

**நன்றியுரை:**
திரு. சின்னத்துரை மயூரன்
(சட்டத்தரணி, பட்டயக் கணக்காளர், நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்)




தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME



வெளிவந்துவிட்டது!
தமிழர் தாயகம் எங்கும்!
வார இதழ் தேசியம் www.thesiyamnews.com THESIYAM தேசியம்
பத்திரிகை!
கல்வி,சமூக,அரசியல் வாராந்த இதழ்!

# சிங்கள வேதாளம் மீண்டும் 13 ஐ உபதேசிக்கிறது!

இலங்கைத்தீவு ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் இந்தத் தருணத்தில் சிங்கள தேசத்தின் ராஜதந்திர மூளை தமிழர்களின் மனநிலையை நாடிபிடித்துப் பார்க்க யாழ்ப்பாணத்தை நோக்கி புறப்பட்டது.

அவ்வேளை, பயணத்தின் போது தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு அதிகாரம் வேண்டும் என யாழ். கல்விமான்கள் ரணிலைப் பார்த்து கேட்டபோது "உங்களுக்கு 13 தீர்வாக இருக்கிறதே" எனக் கூறிவிட்டு சிங்கள தேசத்தின் வேதாளம் கொழும்புக்கு கிளம்பிவிட்டது.

தமிழ் மக்கள் இமோஷனல் இடியட் ஆக (emotional Idiots) இருக்கிறார்கள் என்பதை சிங்களதேசம் நன்கு உணர்ந்துள்ளது.

அதன் அடிப்படையில் தான் தற்போது எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு பொது தமிழ் வேட்பாளரை நிறுத்தி தேர்தலை எதிர்கொண்டால், சிங்களதேசம் எதிர்கொள்ளக்கூடிய நெருக்கடியை சமாளிப்பதற்காகவே ரணில் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டார்.

அந்த பயணத்தின் போது தமிழ் மக்களை திசை திருப்பி இமோஷனல் இடியட்டுக்களாக அலைய விடும் கவனக்கலைப்பு தந்திரம் ஒன்றைச் செய்துள்ளார்.

## இந்திய - இலங்கை ஒப்பந்தம்

தமிழர் தரப்பு ஒரு பொது தமிழ் வேட்பாளரை நிறுத்துவதை தடுப்பதற்கான முயற்சியாகவே 13




என்கின்ற பொறியை மீண்டும் வீசி இருக்கிறார்.

இனி தமிழ் அரசியல் தலைமைகள் 13 வேண்டுமென்றும், வேண்டாம் என்றும், பதிமூன்று பிளஸ் என்றும் மீண்டும் விவாதித்து அக்கப்போர் நடத்துவர்.

தமது எதிர்கால அரசியல் வேலை திட்டங்களை கைவிட்டு வெறும் வாய்சண்டைகளில் ஈடுபட்டு காலத்தை கடத்துவர். அதுவே சிங்கள தேசத்தின் விருப்பமாகும்.

இங்கே 13ம் திருத்தச் சட்டம் நடைமுறையில் உள்ளதா? அதனை நடைமுறைப்படுத்துவதற்கான யதார்த்தம் சிங்கள தேசத்தில் உள்ளதா? அல்லது இந்த 13 தமிழர்களுக்கு ஒரு தீர்வாக அமைய முடியுமா? என்ற கேள்விகளுக்கு அப்பால் 13ஆம் திருத்தச் சட்டம் வேண்டாம் என ஊளையிடுவோரும், 13 வேண்டும் என கதறுவோரும் அடிப்படையில் சிங்கள தேசத்திற்கு சேவகம் செய்பவர்களாகவே இருக்கிறார்கள்.



13 என்பதனை தத்துவார்த்த ரீதியில் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட 13ம் திருத்தச் சட்டம் என்பது இந்தியாவையும் ஈழத் தமிழர்களையும் ஒரே பலிபீடத்தில் வைத்து பலி கொடுப்பதற்கான சிக்கலான சக்கர வியூகமாகவே (Entanglement) ஜே ஆர் ஜெயவர்த்தன வடிவமைத்தார்.

அதனை அன்று தமிழ் மக்களும், இந்தியா ராஜதந்திரிகளும் புரிந்து கொள்ளவில்லை.

## 13ஆம் திருத்தத்தின் அதிகாரங்கள்

அது இன்றும் 36 ஆண்டுகள் கடக்கின்ற நிலையிலும் ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவிற்குமான ஒரு நுவெயபெடநஅநவெ ஆக அதாவது வெளியேற முடியாதவாறு சிக்கலான அந்த சக்கர வியூகத்துக்குள் அகப்பட்டு அதிலிருந்து இருதரப்பினரும் வெளியேற முடியாமல் சிங்கள ராஜாதந்திர சகதிகுழிக்குள் வீழ்த்தப்பட்டு முடக்கப்பட்டுள்ளனர்.

இன்று இலங்கை அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ம் திருத்தச் சட்டத்தில் என்ன இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட இந்த 13 ஆம் திருத்தச் சட்டம் அன்றைய காலத்தில் தமிழ் மக்களுக்கு ஓரளவான அதிகாரத்தை வழங்கக்கூடிய சரத்துக்கள் இருந்தன. ஆனால் இப்போது அந்த சரத்துக்கள்கூட பழம் இருக்க சுளை பிடுங்குவது போல வெட்டி அகற்றப்பட்டுவிட்டன. எனவே அதில் இப்போது எந்த அதிகாரங்களும் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இல்லை.

ஆனால் தமிழ் மக்களுக்கு ஒரு பிராந்திய அலகு என்ற ஒரு சட்ட வரைவு இருப்பதை தவிர வேறு ஒன்றும் அதில் இல்லை.

இலங்கையின் நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டம் என்ற ஒரு சட்டம் கடந்த 36 ஆண்டுகளாக சிங்கள அரசாங்கத்தால் அல்லது சிங்கள அரச இயந்திரத்தால் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதும், அது பேரளவில் அவ்வப்போது தேவைக்காக பொய்யாக நடைமுறைப் படுத்தப்படும்.

அதிகாரத்துக்கு வருகின்ற சிங்களத் தலைவர்களால் தமிழ் தலைமைகளுக்கு வாக்குறுதிகள் வழங்கப்படும். அவ்வாறே அவ்வப்போது இந்திய ராஜதந்திரர்களுக்கு 13 நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது என்றும் இலங்கை அரச

தொடர்ச்சி 08 பக்கம்

# சிங்கள வேதாளம் மீண்டும் 13 ஐ உபதேசிக்கிறது!



13 என்பது தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டமே கிடையாது என்பதை முதலில் திட்டவட்டமாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும் சிங்கள தேசத்தின் பட்டி தொட்டி எங்கும் 13 ஆம் திருத்தச் சட்டம் என்பது ஏதோ தமிழ் மக்களுக்கு பெரும் அதிகாரங்களை கொடுத்தது போன்ற பிரம்மையை சிங்கள ஊடகங்களும் சிங்கள தலைமைகளும் பௌத்த மத பீடங்களும் உருவாக்கிவிட்டு இருக்கின்றன.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்தினால் இலங்கை தீவு இரண்டாக உடைந்துவிடும் என்ற கருத்துருவாக்கத்தை சிங்கள மக்களின் பொது புத்தியில் சிங்கள தலைமைகளினால் கட்டமைப்பு செய்யப்பட்டுவிட்டது.

எனவே 13ஐ நடைமுறைப்படுத்துவது என்று கூறுவதோ அல்லது சமஷ்டி என்று கூறுவதோ இரண்டையும் சிங்கள மக்கள் ஒரே தராசில் வைத்து பார்க்கிறார்கள்.

இந்த இரண்டையும் பற்றி சிங்கள தேசத்தில் யார் பேசினாலும் அவர் சிங்கள மக்களினால் நிராகரிக்கப்பட்டு ஒதுக்கப்படும் நிலையே தோன்றியிருக்கிறது.

அது மட்டுமல்ல இந்த 13 என்பது இந்திய அரசால் சிங்கள தேசத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு அதிகார அத்துமீறல் என்றும் இந்திய ஆக்கிரமிப்பின் குறியீடு என்றும் இந்தியா சிங்கள தேசத்தை அடக்குவதற்கான ஒரு அங்குசம் என்றும் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் கருத்துருவாக்கம் விதைக்கப்பட்டு, அது நிலை நிறுத்தப்பட்டுவிட்டது.

எனவே தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வாக 13 என்றோ, சமஸ்டி என்றோ சிங்கள தேசத்தில் யாரும் பேசப்போவதில்லை.

அவ்வாறு பேசியவர்கள் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு அங்குலத்தை கூட நகர்த்தமாட்டார்கள் என்பதுமே சிங்கள தேச களயதார்த்தம்.

## ரணிலின் வியூகங்கள்



ஆனாலும் இப்போது மீண்டும் சிங்கள வேதாளம் முருங்கை மரத்திலேறி 13 பற்றி உபதேசிக்க தொடங்கிவிட்டது என்பதைத் தமிழ் தரப்புகள் சரிவர உணர்ந்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில், தான் வெற்றி வாகை சூடுவதற்கான அனைத்து வியூகங்களையும் இப்போதே வகுக்கத் தொடங்கிவிட்டார்.

அதனால் தான் தமிழர் தரப்பை குழப்புவதற்காகவே 13 என்கின்ற குண்டை யாழ்ப்பாணத்தில் வீசிவிட்டு சென்றிருக்கிறார்.

எனவே ஜனாதிபதி தேர்தல் முடியும் வரைக்கும், தரப்பு இந்திய தரப்பை ஏமாற்றும்.

## அதிகார பகிர்வு

இந்திய தரப்பிற்கு கொடுக்கப்படும் வாக்குறுதிகளை நம்பி காலத்துக்கு காலம் இலங்கைக்கு பொறுப்பாக இருக்கின்ற அல்லது இலங்கைக்கான இந்திய தூதுவர்கள் தமிழ் தலைமைகளுக்கு நம்பிக்கை ஊட்டி பேசுவார்கள். தமது பதவிக்காலம் முடிந்ததும் அவர்கள் சென்று விடுவார்கள்.

ஆனாலும் இலங்கை தீவில் 13 ஆம் திருத்த சட்டம் என்பது ஒரு மாயமான். அந்த மாயமான் அவ்வப்போது தேவைக்காக காண்பிக்கப்படும்.

அத்தகைய ஒரு நடைமுறைதான் இப்போது யாழ்ப்பாணத்திற்குச் சென்ற சிங்கள வேதாளம் தமிழ் மக்களுக்கு தீர்வு 13 என்று கூறிவிட்டு கிளம்பிவிட்டது.

உண்மையில் 13 என்பது தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டமா? அதனை அறிவார்ந்த ரீதியில் அரசியல் விஞ்ஞான விளக்கத்துடன் பார்க்கின்ற போது அது 1987 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும்.

அந்த அரசியலமைப்பின் ஒரு பகுதியாகிய 13ஆம் திருத்தச் சட்டம் குறிப்பிடப்படுகின்ற தமிழ் மக்களுக்கான அதிகார பகிர்வு தமிழ் மக்களுக்கு தீர்வாக நடைமுறையில் அமையவில்லை.

அதில் தமிழ் மக்களுக்கு உள்ள உரிமைகளும் அதிகாரங்களும் தமிழ் மக்களால் பயன்படுத்தவோ நடைமுறைப்படுத்தவோ பிரயோகிக்கவோ முடியவில்லை.

எனவே 13 தமிழ் மக்களுக்கு எந்த நலனையும் பயக்கவில்லை என்ற அடிப்படையிலுமே இலங்கை அரசை எதிர்த்து தமிழ் மக்கள் ஒரு பெரும் ஆயுதப் போராட்டத்தை நடத்தினர்.

## சிங்கள மக்களின் நம்பிக்கைகள்



தொடர்ச்சி 09 பக்கம்

# சிங்கள வேதாளம் மீண்டும் 13 ஐ உபதேசிக்கிறது!

அதைத் தொடர்ந்து ரணில் தான் இலங்கையின் சிம்மாசனத்தில் அமரும் வரைக்கும் 13 பற்றியே தமிழர்களுடன் பேசுவார்.

இந்திய ராஜதந்திரிகளுக்கும் அதனையே சொல்வார். ஆனால் நடைமுறையில் எதனையும் செய்ய மாட்டார். இது முற்றிலும் எதார்த்த பூர்வமானதும், நித்தியமானதும்.

இலங்கை தீவில் ஒருபோதும் 13ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது. 36 வருடங்களாக ஒரு சட்டத்தை நடைமுறைப் படுத்தாமலும் இந்திய அரசின் அழுத்தங்களுக்கு தாக்குபிடித்தும் காலத்தை கடத்தியவர்களுக்கு இன்னும் ஒரு 50 வருடங்களுக்கு ஏமாற்றி காலத்தை கடத்துவது என்பது ஒரு பெரிதான காரியமுமல்ல.

## ஜனாதிபதித் தேர்தல்



கடந்த எட்டு இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல்களில் அதிகூடிய வாக்கு விகிதத்தை 1994இல் சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்கா 62.28 மூ வாக்குகளை பெற்றிருந்தார்.

அடுத்தபடியாக முள்ளிவாய்க்கால் யுத்த வெற்றியின் பின்னர் சிங்கள தேசத்தின் கதாநாயகனான ராஜபக்ச 2010ல் 57.88மூ வீதமான வாக்குகளை பெற்றிருந்தார்.

ஏனைய தேர்தல்கள் அனைத்திலும் 53மூ வீத வாக்குகளை யாரும் தாண்டவில்லை. 2005 தேர்தலில் தமிழர் தரப்பு பகிஸ்கரித்தபோது மகிந்த ராஜபக்ச 50.29மூ வாக்குகளையே பெற்று அரும்பொட்டில் வெற்றி பெற்றார்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் என்பது சிங்கள தேசத்திற்கு ஒரு தலைவனைத் தேர்ந்தெடுப்பதில் சவாலான தேர்தலாகவே அமையப் போகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் 12மூ ஈழத்தமிழ் மக்கள் உள்ளனர்.

எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் நின்று வாக்களித்தால் வெற்றியாளர்களை தெரிவு செய்கின்ற வாக்குகளிலும் தாக்கம் விளைவிக்கக் கூடிய சக்தி தமிழ் மக்களிடம் உண்டு.

எனவே தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்கள் அந்த வேட்பாளருக்கு வாக்களித்தால் சிங்கள தேசத்தில் தேர்தலில் முதலாம் சுற்று எண்ணில் யாரும் வெற்றிபெற முடியாத ஒரு நெருக்கடியை தமிழ் மக்களால் சிங்கள தேசத்திற்கு வழங்க முடியும்.

எனவே இரண்டாம் மூன்றாம் சுற்று வாக்குக்களில் தான் இலங்கையின் ஜனாதிபதி நாற்காலியில் அமர்வது என்பது அவர்களுக்கு ஒரு கௌரவ குறைச்சலாக அல்லது அங்கீகாரக் குறைச்சலாக அமையும்.

இது சிங்கள தேசத்தின் அரசியலை தமிழ் மக்கள் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டதையும் உணர்த்தும். எனவே இன்றைய மக்கள் இறைமை யுகத்தில் (Sovereignty of people) தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அதற்குரிய இறைமை உண்டு.

தன்னைத்தானே ஆளுகின்ற சுயநிர்ணய உரிமையும் (Right of Self determi nation) உண்டு. அத்தகைய ஈழத் தமிழ் மக்கள் தமக்கே உரித்தான, தம்மிடமே உள்ள இறைமையை பிரயோகிப்பதற்கான, வெளிப்படுத்துவதற்கான ஒரு களமாக இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்த முடியும்.

தமிழ் மக்கள் தமக்கான ஒரு தமிழ் பொது வேட்பாளரை தேர்தலில் நிறுத்தி தமிழ் மக்களின் இறைமையை பிரயோகித்து தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களித்து தமிழ் மக்களின் இறைமையை ஓர் இடத்தில் ஒன்று குவிப்பதன் மூலம் தமது விருப்பத்தினை வெளிப்படுத்தி தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட முடியும். அதனை ஒரு மக்கள் ஆணையாகவும் சர்வதேசத்திற்கு வெளிக்காட்ட முடியும்.

எனவே சிங்கள தேசத்தின் வாக்குறுதிகளுக்கும் சிங்கள சாத்தானின் வேதங்களுக்கும் விழுந்து விலைபோகாமல், ரணில் ஓதும் சாத்தானின் வேதத்துள் வீழ்ந்துவிடாது 13ஆம் சட்டம் என்று அவர் அவிழ்த்துவிடும் மாயமானைப் பின்தொடராமல், அதன் பெயரால் சண்டையிட்டு ரணில் விரும்பும் குழப்பத்துக்குள் வீழாமல், தமிழ் மக்களின் இறைமையை வெளிப்படுத்துவதற்கான ஒரு தேர்தலாக இந்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வதுதான் முதற்கண் சிறந்தது.

இன்றைய சூழலில் அதுவே தமிழ் மக்கள் தமது தேசிய அபிலாசைகளை அடைவதற்கான வழியை திறப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாயும் அமையும்.



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தை ஆரம்பம்!


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தை 14ஆவது முறையாகவும் வெகு விமர்சையாக ஆரம்பமாகியுள்ளது. இது நேற்றைய தினம் (19.01.2024) யாழ்ப்பாணம் முற்றவெளியில் காலை 10:30 மணிக்கு ஆரம்பம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தக சந்தையானது நாளை மற்றும் நாளை மறுதினமும் சேர்த்து மொத்தமாக மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட பீடாதிபதி ந.கங்காதரன், யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறை மன்றத்தினர், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் அனுசரணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.








# யாழில் இடம்பெறவுள்ள தமிழர் பெருவிழா!

யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் இன்று (20.01.2024) முதல் 24ஆம் திகதி வரை தமிழர் பெருவிழா நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண கலையகம், உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யாழ்ப்பாணம் தமிழ் இசைச்சங்கம், சென்னை, கவிஞர் - முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம் ஆகியன இணைந்து இந்த பெருவிழாவை ஏற்பாடு செய்துள்ளன.

இதேவேளை மணிமேகலை அமுதசுரபி பெற்ற இலங்கை மணிபல்லவத் தீவில் 120 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஈழத் தமிழுல கின் வரகவி நயினை நாகமணிப் புலவர் இயற்றிய நயினை மான்மியம் என்ற மகாகாவியம், முனைவர் ந. சுலோச்சனா சகாதேவன் எழுதிய உரையுடன் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு ஜனவரி 23ஆம் திகதியும் 24ஆம் திகதியும் பிற்பகல் 2 மணிக்கு இலங்கை மணிபல்லவத்தீவு அமுதசுரபி அரங்கத்தில் நடைபெறவுள்ளதாக சென்னை கவிஞர், முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் பாட்டழகன் தெரிவித்துள்ளார்.



# யுக்திய நடவடிக்கை: கடந்த 24 மணித்தியாலங்களில் 963 பேர் கைது!

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய நடவடிக்கையின் கீழ் நேற்று (19) காலை முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 963 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 638 சந்தேக நபர்களும் குற்றவியல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்த பட்டியலில் இருந்த 325 சந்தேக நபர்களும் இதில் அடங்குவர்.

இதேவேளை குறிப்பிட்டளவு பின்வரும் போதைப் பொருட்களும் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**போதைப்பொருட்கள் மீட்பு**

300 கிராம் ஹெரோயின் 172 கிராம் ஐஸ் போதைப்பொருள், 530 கிராம் கஞ்சா, 99,209 கஞ்சா செடிகள், 336 கிராம் மாவா, 314 கிராம் மதன மோதகம், 24,083 போதை மாத்திரைகள் என்பவையாகும்.

இந்நிலையில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 638 சந்தேக நபர்களில் 10 சந்தேகநபர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான 08 பேர் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

**கைது செய்யப்பட்ட பலர்**

காவல்துறை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் காவல்துறை விசேட பணியகம் ஆகியவற்றின் பட்டியலில் இருந்த 25 சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் கைது செய்யப்பட்ட 325 சந்தேக நபர்களில் 66 சந்தேகநபர்கள் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான திறந்த பிடியாணைகளையும் 228 பேர் போதைப்பொருள் அல்லாத குற்றங்கள் தொடர்பான திறந்த பிடியாணைகளையும் பெற்றுள்ளதாக காவல்துறையினர் மேலும் தெரிவித்தனர்.

கைரேகைகள் மூலம் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்ட 20 சந்தேக நபர்களும், குற்றங்களுக்காக தேடப்பட்டு வரும் 11 சந்தேக நபர்களும் இந்த நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# தமிழரசின் தலைமைக்கான தேர்தலைக் குழப்பச் சதி?

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த அவர் உதயன் அலுவலகத்துக்கும் வந்து செய்தியாளர் சந்திப்பிலும் பங்கெடுத்தார். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியத்தின் பாதையில் தடம்மாறாது பயணிக்க வேண்டும். அதுவே என் விருப்பம். தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கு மும்முனைப் போட்டி நிலவுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் வெற்றிபெற்றால் தமிழ்த் தேசியப் பாதையிலிருந்து தமிழரசுக் கட்சி நிச்ச

யம் தடம்மாறும் ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக அவர் இருந்தபோது, வெளிப்படுத்தியர் கருத்துகளும் அதன்மூலம் தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பும் எதிர்கொண்ட விமர்சனங்களும் ஏராளம். நடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெற்றி பெற்றால், தமிழ்த் தேசியப் பாதையில் தமிழரசுக் கட்சி பயணிக்கும். இதேவேளை - தமிழரசுக் கட்சியின்

தலைவருக்கான தேர்தலைக் குழப்புவ ம் தற்கும் சதி முயற்சிகள் இடம்பெறுகின்ற னவா? என்றும் அச்சப் பட வேண்டியுள்ளது. ஏனெனில், வாக்களிக்கத் தகுதி யான பொதுச்சபை உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் இன்னும் இற்றைப்ப டுத்தப்பட்டு முறைப்படி அறிவிக்கப்பட வில்லை. அழைப்புக்கடிதம் எவருக்கும் வந்து சேரவில்லை. இவை பற்றி கட்சித் தலைவருக்குத் தெரியப்படுத்தி அவற்றை விரைந்து சீராக்குமாறு அழுத்தம் கொடுக்கவே, நான் யாழ்ப்பாணத்துக்கு வந்தேன் - என்றார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

# யாழ். பல்கலையில், சமனற்ற நீதி நூல் வெளியீட்டு விழா!

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ராஜ் ராஜரட்ணத்தின் "சமனற்ற நீதி" என்னும் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இன்று (20.01. 2024) இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வானது யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் பிற்பகல் 2.45 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் பற்றிய அறிமுக உரையை வைத்திய கலாநிதி ம. குருபரன் நிகழ்த்தவுள்ளார். இதன்பின்னர் நூல் வெளியீடும் சிறப்புப் பிரதி வழங்குதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.
அத்துடன் சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன், சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் நூல் பற்றிய சிறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

"சமனற்ற நீதி" நூலின் நூலாசிரியர் ராஜ் ராஜரட்ணம் பற்றி நோக்குகையில் 1957 இல் இலங்கையில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை இலங்கையிலும் இந்தியாவிலும் கற்றார்.
உயர் கல்வியை இங்கிலாந்திலும் கற்று சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியானார்.
அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.
சேஸ் மேன்ஹாட்டன் வங்கியில் நிதிப்பகுப்பாய்வாளராக தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் 1997 இல் "கலியன்" முதலீட்டு நிறுவனத்தை நிறுவினார்.

அமெரிக்க நீதித்துறையும் அமெரிக்க புலனாய்வுப் பணியகமும் செய்த கூட்டுச் சதியால் 2009 இல் ராஜ் ராஜரட்ணம் கைது செய்யப்பட்டார்.

இந்த நூலில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி மற்றும் அமெரிக்காவில் நிலவும் சமனற்ற நீதி குறித்து ராஜ் ராஜரட்ணம் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் வெளியீட்டு விழாவினை ஐபிசி தமிழ் தொலைக்காட்சி மற்றும் ஐபிசி தமிழ் வலையொளித் தளத்தின் ஊடாகவும் நேரலையில் காண முடியும்.




விளம்பர தொடர்புகளுக்கு
Mobile : +94 777 163990



அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




| தலைமையகம் | | | | |
|---|---|---|---|---|
| 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| 021 222 4353 | ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| 0777 22 5292 | முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME